பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

29 05 2024 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. பிஜேபி அரசு நிறைவேற்றியுள்ள வளர்ச்சித் திட்டங்களால், அக்கட்சியின் மீது மக்களின் நம்பிக்கை வலுப்பெற்றிருப்பதாக பிஜேபி-யின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இடஒதுக்கீட்டை முடிவுக்கு கொண்டுவருவதே பிஜேபி மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் நோக்கம் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

3. தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், தமது இடைக்கால ஜாமீனை மேலும் ஏழு நாட்கள் நீட்டிக்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது.

4. இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழகம் உருவாகி வருகிறது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. ஆசிய கை மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் உட்பட ஏழு பதக்கங்களை வென்றுள்ளது

*-- இனி விரிவான செய்திகள் --*

**<<<<<<>>>>>**

நாடு முழுவதும் மக்களவைக்கான ஆறு கட்டத்தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், வரும் சனிக்கிழமை ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு 57 தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

ஏழு மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசம் அடங்கிய இந்த தொகுதிகளில் நாளை மாலையுடன் பிரச்சாரம் முடிவுக்கு வரவுள்ளது.

இதனால், அரசியல் கட்சித்தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி தனியார் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில், நாடு முழுவதும், கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்களால், பிஜேபி மீதான மக்களின் நம்பிக்கை வலுப்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

உறுதியான கான்கிரீட் வீடுகள் உள்ளிட்ட அரசின் திட்டங்களால், மக்கள் வறுமையிலிருந்து மீள்வதற்கான சூழல் உருவாகியிருப்பதாக அவர் கூறினார்.

மேற்குவங்க மாநிலம் **Muthurapur** என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் திரு நரேந்திர மோடி பங்கேற்று பேசினார்.

இதனிடையே, உத்தரப்பிரதேச மாநிலம் **'Bansgaon** என்ற இடத்தில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, ஷெல்யூல்டு பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை முடிவுக்கு கொண்டுவருவதே பிஜேபி மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் நோக்கம் என்று குற்றம் சாட்டினார்.

அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய அரசியலமைப்புச் சட்டத்தை ஒழிப்பதுடன், தனியார் மயமாக்கலை ஆயுதமாக பயன்படுத்தி, அரசு வேலைகளை அகற்றுவதற்கான முயற்சிகளும் இந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறை கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பது மட்டுமல்லாமல், நாட்டின் ஜனநாயகத்தையும், அரசியலமைப்பையும் பாதுகாக்கக்கூடிய தேர்தல் இது என்றும் திரு ராகுல்காந்தி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில் கடந்த ஆறாவது கட்டமாக 58 தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில் 63 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த தேர்தலில் ஆண்களைவிட, மூன்று சதவீதம் அதிக பெண் வாக்காளர்கள் வாக்களித்திருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

64 புள்ளி ஒன்பது ஐந்து சதவீதம் மகளிர் வாக்களித்துள்ள நிலையில், ஆண்கள் 61 புள்ளி ஒன்பது ஐந்து சதவீதம் பேர் மட்டுமே வாக்களித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு கோடியே ஐந்து லட்சத்து 44 ஆயிரத்து தொள்ளாயிரத்து 33 பேர் தங்களது வாக்குரிமையை செலுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

சென்னையில் மூன்று மக்களவைத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி இன்று நடைபெறுகிறது.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான திரு ஜெ ராதாகிருஷ்ணன் இதனை தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - ராதாகிருஷ்ணன் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், தமது இடைக்கால ஜாமீனை மேலும் ஏழு நாட்கள் நீட்டிக்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது.

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில், கைது செய்யப்பட்ட திரு அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு, கடந்த பத்தாம் தேதி முதல் வரும் ஒன்றாம் தேதிவரை இடைக்கால ஜாமீன் வழங்கி உச்சநீதிமன்ற நீதிபதிகள் திரு சஞ்ஜீவ் கண்ணா, திரு தீபாங்கர் தத்தா அமர்வு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, திரு கெஜ்ரிவால், ஜூன் 2-ஆம் தேதி நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும்.

ஆனால், மருத்துவ பரிசோதனைக்காக மேலும் ஏழு நாட்கள் இடைக்கால ஜாமீனை நீட்டிக்க வேண்டும் என்றும், இதனை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்றும் திரு கெஜ்ரிவால் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், அதனை ஏற்க மறுத்துவிட்ட நீதிபதிகள், ஜாமீன் கோரி, தில்லி சிறப்பு நீதிமன்றத்தை திரு அரவிந்த் கெஜ்ரிவால் அணுகலாம் என்று உத்தரவிட்டனர்.

<<<<<<>>>>>

லோக்பால் அமைப்பின் செயலாளராக ஐ ஏ எஸ் அதிகாரி திரு பிரதீப் குமார் திரிபாதி நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவை நியமனங்களுக்கான குழு இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.

மேலும், மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக ஐ ஏ எஸ் அதிகாரி திரு ராகேஷ் ரஞ்சனை நியமிப்பதற்கான ஒப்பதலையும் அந்தக்குழு வழங்கியுள்ளது.

<<<<<<>>>>>

சர்வதேச ஐ நா அமைதி தூதுவர்கள் தினத்தையொட்டி, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், போரால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பாதுகாப்பு மற்றும் அமைதியை பராமரிப்பதற்கு தங்களை அர்ப்பணித்து செயல்படும் தைரியமான வீரம் மிக்க ஆண்கள் மற்றும் பெண்களை இந்த நேரத்தில் தாம் தலைவணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

அமைதி, பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டு தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்களுக்கு இந்த தருணத்தில் தாம் மரியாதை செலுத்துவதாகவும் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழகம் உருவாகி வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

விளையாட்டுத்துறைக்கு கடந்த மூன்றாண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னையில் உள்ள பல்வேறு விளையாட்டு அரங்கங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம், ஏராளமான பதக்கங்களை தமிழகத்தை சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பெற்று, மாநிலத்திற்கு பெருமை சேர்த்திருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளை தமிழக அரசு வெற்றிகரமாக நடத்தி இருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நீலகிரி மாவட்டம் கொளப்பள்ளி பகுதியில் 30 அடி ஆழ கிணற்றுக்குள் குட்டி யானை ஒன்று தவறி விழுந்தது.

இதுகுறித்த தகவலின்பேரில் வனத்துறையினர் அந்த யானையை மீட்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 28 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

இந்தியாவுடன் 1999-ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறியதாக அந்நாட்டின் முன்னாள் பிரதமர் திரு நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முஸ்லீம் லீக் - நவாஸ் கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன், செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் கடைபிடிக்கவில்லை என்பது திரு நவாஸ் ஷெரீப்பின் அறிவிப்பின்மூலம் தெரியவந்துள்ளது.

அடல் பிகாரி வாஜ்பாய் கடந்த 1999-ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ஆம் தேதி லாகூர் சென்று பாகிஸ்தானுடன் லாகூர் பிரகடனத்தில் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

நாட்டின் வடமேற்கு மற்றும் மத்தியப்பகுதி மாநிலங்களில் தற்போது நீடித்துவரும் வெப்ப அலையின் தாக்கம் நாளை முதல் படிப்படியாக குறையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு, இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, தில்லி, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட இடங்களில் நாளை வரை வெயிலின் தாக்கம் தொடரும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

அடுத்த சில தினங்களில் வெப்பநிலை இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லியின் **Mungeshpur** பகுதியில் நேற்று அதிகபட்சமாக 49 புள்ளி ஒன்பது டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானதாக வானிலை மைய தகவல் தெரிவிக்கிறது.

தென்மேற்கு பருவமழை கேரள மாநிலத்திலும், வடகிழக்கு மாநிலங்களிலும் அடுத்த ஓரிரு தினங்களில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுவதால் வெப்பநிலை குறையும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய கை மல்யுத்த சாம்பியன் போட்டிகளில் இந்தியா ஏழு பதக்கங்களை வென்றுள்ளது.

உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட் நகரில் நடைபெறும் இப்போட்டியில் ஒரு தங்கம் மற்றும் ஆறு வெண்கலப்பதக்கங்களை இந்திய வீரர், வீராங்கனைகள் பெற்றுள்ளனர்.

---------------

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் செர்பியாவின் நோவாக் ஜோக்கோவிச் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<>>>>>**